NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 17 March 2018

### தெரிவுக் குழுவின் பொது விசாரிப்பில் இணை பேராசிரியர் அபாய சங்கு

# தாய்மொழி, கிளைமொழிகள் மூலம் பொய் பிரசார ஆபத்து

தாய்மொழிகள், கிளைமொழிகள் மூலம் பொய் பிரசாரம் பரவக்கூடும். அத்தகைய பிரசாரங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை அலட்சியப்படுத்திவிடக்கூடாது என்று சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் இணை பேராசிரியர் முகம்மது எல்மி நெக்மட் எச்சரித்துள்ளார்.

இணையத்தில் பொய் பிரசாரம் வேண்டுமென்றே பரப்பப்படும் ஆபத்துகளைத் தவிர்க்க உதவும் பரிந்துரைகளை உருவாக்குவதற்கான 10 பேரைக் கொண்ட ஒரு தெரிவுக் குழுவின் பொது விசாரிப்பில் இணை பேராசிரியர் நேற்று தன் கருத்துகளை முன்வைத்தார்.

பொய்யான தகவல்கள் பற்றிய பல விவாதிப்புகளும் ஆங்கில மொழியிலேயே நடப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இருந்தாலும் முதிய சிங்கப்பூரர்கள் போன்ற சமூகத்தின் சில பிரிவினருக்குத் தங்கள் தாய்மொழிகளில் பேசிப் புழங்குவதே வசதியாக இருக்கும் என்பதால்



சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் இணை பேராசிரியர் முகம்மது எல்மி நெக்மட், தவறான தகவல்கள் பற்றிய பல விவாதிப்புகளும் ஆங்கிலத்திலேயே நடப்பதைச் சுட்டிக்காட்டினார்.
**படம்:** GOV.SG

வாட்ஸ்–அப் குழு போன்ற பிரத்தியேகத் தளங்களின் மூலம் அத்தகைய தாய்மொழிகளில் பொய் பிரசாரம் கிடுகிடுவென பரவக்கூடும் என்று அவர் எச்சரித்தார். வெவ்வேறான பல மொழிகள் மூலமாக பரப்பப்படும் பொய் பிரசாரத்தின் தாக்கத்தைப் பரிசோதிக்க அதிகம் முயற்சிகள் இடம்பெறவேண்டியது இதனால் அவசியமாகிறது என்றார் அவர்.

மலேசியா, இந்தோனீசியா போன்ற பக்கத்து நாடுகளிலிருந்து கிளம்பக்கூடிய தகவல்களும் சிங்கப்பூரை பாதிக்கக்கூடும் என்று பேராசிரியர் குறிப்பிட்டார்.

இளம் சிங்கப்பூரர்கள் அளவுக்கு முதியவர்கள் பொய் பிரசாரங்களின் ஆபத்துகள் பற்றி தெரிந்திருக்கும் வாய்ப்புகள் அவ்வளவாக இல்லை என்று தெரிவித்த பேராசிரியர் எல்மி, போலியான தகவல் பற்றிய விவாதிப்புகள் பொதுவாக ஆங்கிலத்தில் நடப்பதே இதற்குக் காரணம் என்றார்.

இணையத்தில் பொய் பிரசாரம் வேண்டுமென்றே பரப்பப்படுவதால் சமூக நம்பிக்கை சீர்குலைந்து சமூகம் இன ரீதியில் பிளவுபடக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிய பேராசிரியர், நம்முடைய சமூகப் பிணைப்பைப் பாதுகாக்க கூடுமான வரை தலைசிறந்த அனைத்து நடவடிக்கைகளையும் செயல்படுத்த வேண்டியது அவசியம் என்று எழுத்து மூலமாக தெரிவுக் குழுவிடம் தாக்கல் செய்த அறிக்கையில் குறிப்பிட்டார்.

இத்தகைய முயற்சிகளில் மிகவும் ஏற்புடைய விதிமுறைகளும் தேவைப்படக்கூடும் என்று பேராசிரியர் கூறினார்.

கல்வி போதனைகளும் அவசியம் என்ற பேராசிரியர், பல இன சமூகத்தில் பொய் பிரசாரம் வேண்டுமென்றே பரப்பப்படுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி அதிகமாக ஆராயவேண்டும் என்றும் கருத்துரைத்தார்.

கணினி இணையத்தளங்களின் பொறுப்பாளர்கள், தங்கள் இணையத்தளங்களில் போலி செய்திகளும் பொய்யான தகவல்களும் பரவுவதை மும்முரமாக தடுக்கவேண்டியதை அவசியமாக்கும் சட்டங்கள் தேவை என்றும் பேராசிரியர் கோரிக்கை விடுத்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.